www.tamilarangam.net

# தமிழ் ஈழ ராணுவம்

## TAMIL EELAM ARMY

### உரிமை கோருகின்றோம்.

அண்மையில் சிறீலங்காவின் தேசிய வருமானத்தில் முன்னிற்கும் தேயிலை ஏற்றுமதியில் சயனைற் கலக்கப்பட்ட சம்பவத்தினை தமிழ் ஈழ இராணுவம் உரிமை கோருகின்றது. இந் நிகழ்வு சிறீலங்காவின் தரகு முதலாளித்துவ அரசினை மட்டுமின்றி சர்வதேச வல்லரசுகளின் கூட்டணியான அமெரிக்க ஏகாதிபத்தியம், இஸ்ரேலிய சியோனிஸ்டுகள், தென்னாபிரிக்க சோவினிஸ்டுகள், பாகிஸ்தான் ஆகிய தளங்களுக்கு எதிராகவும் 'பெரும் அச்சத்தினை' ஏற்படுத்தி உள்ளது.

எமது தமிழ் ஈழ விடுதலைப்போராட்டமானது முன்பு இருந்த நிலையைவிட தற்போது மிகவும் நெருக்கடியான சூழ்நிலையை அடைந்துள்ளது. சிங்கள சிறிலங்கா அரசின் கூலிப்படைகள் தமது வெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ள இந்த வேளையில், இந்த நடவடிக்கையானது தமிழ் ஈழ விடுதலைப்போராட்டத்தில் ஓர் புதிய திருப்பத்திற்குள் காலடி எடுத்து வைத்திருக்கும் தமிழ் ஈழ இராணுவமானது சரியான திசையில் செல்கின்றது என்பதையும் எடுத்துக்காட்டுகின்றது.

<u>ஏன் சயனைற் கலக்கப்பட்டது</u>......?

எமது மக்களுக்கு எவ்விதமான ஆபத்துக்களும் ஏற்படகூடாது என்பதில் கவனமாக இருக்கும் நாம் இது கருதியே, வெளிநாடுகளிற்கு ஏற்றப்பட இருந்த தேயிலைக்கு மட்டுமே 'சயனைற்' கலந்தோம். எம்மால் சயனைற் கலக்கப்பட்ட தேயிலை முழுவதும் வெளிநாட்டு சந்தைகளிற்கு ஏற்றுமதியானதின் பின்பே இது பற்றி அறிந்த சிறீலங்கா அரசு இது பற்றிய பலத்த விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

<u>இந்த நடவடிக்கையின் விளைவாக</u>......

இதன் விளைவாக சிறிலங்காவின் சிங்கள இனவாத அரசிடம் எந்த ஒரு நாடும் தேயிலையை கொள்வனவு செய்ய முன்வரமாட்டார்கள். இதனால் சிறீலங்காவின் பொருளாதாரம் பெரும் வீழ்ச்சி அடைவது மட்டும் அல்லாது, எந்த ஒரு ஏற்றுமதிப் பொருளையும் உலகச்சந்தையில் சிறீலங்கா அரசு விற்க முடியாத நிலைமையை ஏற்படுத்தியுள்ளோம். மேலும் இதன் விளைவாக தேயிலைத்தோட்டங்களை தனியாருக்கும், கம்பனிகளிற்கும், வெளிநாட்டு முதலாளிகளிற்கும் குத்தகைக்கு விடவிருந்த அரசினது திட்டத்தை நாம் முறியடித்துள்ளோம். (ஏற்கனவே இத்திட்டத்தின் படியாக பல ஆயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்களை அரசு வெளியேற்றிக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.) கடந்த காலங்களில் சிங்கள இனவெறி அரசினால் அடக்கி ஒடுக்கப்பட்டு வந்த மலையகத் தமிழர்களை இந்த நடவடிக்கை தமிழ் ஈழப் போராட்டத்தில் மேலும் ஈடுபடச்செய்யும் என நம்புகின்றோம்.

<u>கிளிநொச்சிப் பொலிஸ் நிலையம்</u>.......

அண்மையில் விடுதலை இயக்கங்களுக்கும், சிங்கள சிறிலங்கா அரசிற்கும் இடையில் போர்நிறுத்தம் ஏற்பட்டு திம்புவில் சமரசப் பேச்சுவார்த்தை நடைபெறுகையில், சிங்கள சிறீலங்கா அரசினது கூலிப்பட்டாளங்கள் நூற்றுக்கணக்கான அப்பாவி தமிழர்களை கொன்று குவித்துக்கொண்டிருந்தது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் பிரித்தானிய S·A·S, இஸ்ரேலிய மொசாட், போன்ற சர்வதேச பயங்கரவாதிகளால் பயிற்றுவிக்கப்பட்ட 'விசேட பொலிஸ் கொமாண்டோக்களையும்' இராணுவத்தினரையும் உள்ளடக்கிய பொலிஸ் நிலையங்களில் ஒன்றான கிளிநொச்சிப் பொலிஸ்நிலையத்தை தேர்ந்தெடுத்தோம். எம்மால் இப்பொலிஸ் நிலையம் வெற்றிகரமாக தகர்க்கப் பட்டபோது இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இத் தாக்குதலின் போது தமிழ் ஈழ இராணுவத்தினரின் தரப்பில் எவ்வித சேதமும் இல்லை.

கடந்த 21-12-85ம் திகதி சனிக்கிழமை சிறீலங்காவின் கூலிப்படையினர் கவசவண்டிகள், டிரக்குகள், பீரங்கிகள் சகிதம் தரைமார்க்கமாகவும், நான்கு ஆயுதம் தாங்கிய ஹெலிகொப்டர்களின் மூலம் ஆகாயமார்க்கமாகவும் தமிழ் மக்களை கொடூரமாகத் தாக்கிய வேளையில் அனைத்து இயக்கப் போராளிகளும் இக் கூலிப்படைக்கு எதிராகத் தாக்குதலை மேற்கொண்டனர் (இதன் போது எமது போராளி ஒருவர் வீரமரணம் அடைந்தமை குறிப்பிடத்தக்கது)

"எமது போராட்டம் சிங்கள சிறீலங்காவின் கூலிப்பட்டாளங்களையும், சர்வதேச பயங்கரவாதிகளான பிரிட்டிஷ் S·A·S, இஸ்ரேலிய மொசாட் ஆகியவற்றினை தமிழ் ஈழ மண்ணில் இருந்து விரட்டியடித்து, தமிழ் ஈழ மக்கள் விடுதலை பெறுமட்டும் ஓயமாட்டாது"

"மண் மீட்பு இல்லையேல்
வீர உயிர் துறப்பு"

- தமிழ் ஈழ இராணுவம் (இலண்டன்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்